**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 24/2020**

**Date :02.03.2026**

**வா.சா. 1 - பிரான்ஸிஸ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**9 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

2010 முதல் 2018 வரை நான் 3 முறை சபைக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு கணக்கராக பொறுப்பில் இருந்தேன் என்றால் சரிதான். வாதுரையில் 2009 ம் ஆண்டிற்கு முன்புள்ள வரவு செலவு கணக்குகளில் குறைபாடு உள்ளதாக என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் 1 ம் வாதி 2012 முதல் 2018 வரை நான் கணக்கராக பணியாற்றியபோது சபைக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு என்னுடன பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். 2010 முதல் 2018 வரை உள்ள காலக்கட்டத்தில் டாக்டர் கிறிஸ்டின் எபினேசர் என்பவரும் சபைக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயலராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான்.

நான் இவ்வழக்கை பாலூர் CSI திருச்சபையில் உள்ள மற்ற உறுப்பினர்களுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பல சேகர சபைகள் சேர்ந்து தான் ஒரு பேராயம் என்று குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். அதைப்போல் ஒரு பாஸ்ட்ரேட் சபை ஒரு சேகர சபையாகவும் இருக்கும் என்றால் சரிதான். அதைப்போல் பல கிளை சபைகள் சேர்ந்து ஒரு பாஸ்ட்ரேட் சபையாக இருக்கும் என்றால் சரிதான். அதைப்போல் பல பேராயங்கள் சேர்ந்து சினாடு என்று குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான்.

பொதுவாக பாலூர் CSI திருச்சபையில் கணக்கு புத்தகம் கணக்கரிடமும், மினிட்

புத்தகம் செயலரிடமும், குடும்ப பதிவேடு மற்றும் பொது பதிவேடு சபை போதகரிடமும் இருக்கும் என்றால் சரிதான். CSI பேராயத்தின் கீழ் செயல்படும் சபைகளில் தேர்ந்தெடுக்கப்படும் சபைக்கழு உறுப்பினர்களின் பதவிகாலம் 3 ஆண்டுகள் என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு ஜெபசுஜி என்பவர் சபை போதகராக நியமிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான்.

தற்போது அவர் மாற்றம் பெற்று வேறு சபைக்கு சென்று விட்டார் என்றால் சரிதான். CSI திருச்சபையில் சபை தேர்தலுக்கு சபை போதகரையோ, சபை போதகர் சார்பு நிலையில் செயல்படுவார் என பேராயம் கருதும் பட்சத்தில் வேறு சபை போதகரையும் தேர்தல் அதிகாரியாக நியமிக்கலாம் என பேராய அமைப்பு விதியில் உள்ளது என்றால் சரிதான். தேர்தல் விதிப்படி வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்து அதில் உள்ள திருத்தங்களை சரி செய்த பின்னரே அல்லது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு ஆட்சேபனைகள் ஏதேனும் உண்டா என கேட்ட பின்னரே ஆட்சேபனை இல்லை என்று தெரிந்த பின்பு இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்வார்கள் என்றால் சரிதான்.

வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கு தனியாக சபை போதகருக்கு மட்டும் அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரிதான். வாக்காளர் பட்டியலை தயாரிக்க வேண்டுமெனில் சபை போதகர் சபை நிர்வாகிகளிடம் கலந்துரையாடி எல்லா ஆவணங்களையும் முறையாக பார்வையிட்டு சபை நிர்வாகிகளின் ஒத்துழைப்போடும் சம்மதத்தோடும் அனைவரும் ஒன்று இணைந்து தான் வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்து ஆட்சேபனைக்காக விளம்பரம் செய்து ஆட்சேபனை இல்லை எனில் அல்லது ஆட்சேபனை இருப்பின் அதனை சீர் செய்து இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்யவேண்டும் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் 26.01.2020 ம் தேதி நடத்தப்பட்ட தேர்தலுக்காக தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் நிர்வாக குழுவினரிடம் இருந்து சபை போதகர் எந்தவித ஆவணங்களையும் கேட்டு பெறாமலும் ஆவணங்களை முறையாக ஆய்வு செய்யாமலும் நிர்வாக குழுவிடம் எந்த ஒரு

கலந்துரையாடலும் செய்யாமல் சபை போதகர் தானாகவே தனது விருப்பு வெறுப்புக்கேற்றவாறு தகுதியுள்ள நபர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்காமல் தகுதியற்ற நபர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்து மேற்படி தேர்தலுக்கான போலி வாக்காளர் பட்டியலை தயாரித்து உள்ளார் என்றால் சரிதான்.

அடிப்படையில் மேற்கூரிய காரணங்கள் தவிர ஒரு நடப்பாண்டு தேர்தல் நடத்துவதற்கு வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் போது முந்தைய தேர்தலுக்காக தயாரிக்கப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலை வைத்து ஒப்பீடு செய்து தான் புது வாக்காளர் பட்டியல் தயார் செய்வார்கள் என்றால் சரிதான். கடந்த தேர்தலுக்கு முறைப்படுத்தப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலை வைத்து முந்தைய தேர்தலுக்கு பின் இறந்தவர்கள், திருமணம் முடிந்து வெளியூர் சென்றவர்கள், சங்க பாக்கி உள்ளவர்கள் பெயர்களை வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்து இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

அதைப்போல் புதிதாக உறுப்பினர்கள் அந்தஸ்து பெற்றவர்கள், புதிதாக திருமணம் முடிந்து தங்கள் சபையில் சேர்ந்தவர்கள் மற்றும் திருமணம் முறையாக முடிக்கவில்லை எனில் திருமணத்தை சபையில் முறைப்படுத்தியவர்கள் மற்றும் சங்க பாக்கிகளை செலுத்தியவர்கள் அனைவரும் புதிய வாக்காளர்களாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் பாலூர் திருச்சபையில் 2009 வரை உள்ள நிர்வாக குழுவில் பணியாற்றி பண மோசடி செய்தது நிரூபிக்கப்பட்டதால் மேற்படி திருச்சபையின் பாக்கிதாரர்கள் (Defaulters) என இவ்வழக்கின் 6 மற்றும் 7 பிரதிவாதிகளால் தகுதி நீக்கம் பெற்றவர்கள் என்றால் சரிதான்.

பாக்கிதாரர்கள் (Defaulters) எனதகுதி நீக்கம் பெற்றவர்கள் மீண்டும் பாலூர் திருச்சபையில் உறுப்பினராக வேண்டுமெனில் அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கி தொகையை செலுத்திய பின்புதான் உறுப்பினராக முடியும் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் இன்று வரையிலும் பாலூர் திருச்சபைக்கு செலுத்த வேண்டிய பாக்கி தொகையை செலுத்தாததால் CSI திருச்சபையின் அமைப்பு விதிப்படி மேற்படி பிரதிவாதிகள் ஒரு போதும் தங்களது சபையில்

உறுப்பினராக இயலாது என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் இன்று வரையிலும் பாலூர் திருச்சபைக்கு செலுத்த வேண்டிய பாக்கி தொகையை செலுத்வில்லை என்றால் சரிதான். பாக்கிதாரர்கள் (Defaulters) பாக்கி பணம் செலுத்தாமல் முறைகேடாக உறுப்பினர்களாக சபை போதகர் சபையில் சேர்த்து வாக்காளர் பட்டியலில் சேர்த்திருந்தால் சபை போதகர் வேண்டுமென்றே சபையின் சட்டதிட்டங்களுக்கு எதிர் மறையாக செயல்பட்டுள்ளதோடு சார்புநிலையில் உள்ளார் என உறுதியாக காட்டும் என்றால் சரிதான். 2018 ற்கான தேர்தல் காலதாமதமாக 2020 ம் ஆண்டு நடந்தது என்றால் சரிதான். 2020 ம் ஆண்டிற்கான முந்தைய தேர்தலுக்கான இறுதி வாக்காளர்பட்டியலின் அசல் சபை போதகரிடம் உண்டு என்று சொன்னால் சரிதான்.

2020 ம்ஆண்டு தேர்தலுக்கான வரைவு வாக்காளர் பட்டியலை சபை போதகர் சபை உறுப்பினர்களின் பார்வைக்கு வைத்து அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டு கருத்துக்களோ ஆட்சேபனையோ கேட்கவில்லை என்றால் சரிதான். 2018 ம் ஆண்டிற்கான தேர்தலுக்கு தயாரிக்கப்பட்டு வாக்காளர்பட்டியலில் இறந்து போன 3 நபர்களின் பெயர்கள் முறையே 1. பிரகாசி, 2. ரோஸ் கண்மணி மற்றும் 3. செல்லம்மாள் இயேசுவடியாள் ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதைப்போல் 2018 ன் முந்தைய சபைக்குழு தேர்தலில் வாக்களித்த வாக்காளர் ஆன டி. ரசல், கே. ஷிபா டெ ன்னிஸ், சுஜாதா ஜெயபால்சிங், சி. ஐசக் ராஜ் மற்றும் டி. பென்சாம் ஆகியோரது பெயர்கள் 2018 ம் ஆண்டைய தேர்தலுக்கான தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் மேற்படியான பெயர்கள் இடம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். அதைப்போல் புதிய வாக்காளரான ஜெபசெல்வகுமார் என்பவருடைய பெயரும் இடம் பெறிவில்லை என்றால் சரிதான். ஆனால் வாக்களிக்க தகுதி இல்லாத போலி வாக்ககாளரான சி, கிறிஸ்டின் சுகிதா, எம்.விஜயராணி, ஏ. கிறிஸ்டினாள் ஆகியோரது பெயர்கள் வாக்களாரது பட்டியலில் இடம் பெற்றிருந்தது என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>